November 28, 2011

Honble Minister for Tourism visited some of the flood affected areas in Chennai and launched the distribution of food packets



**இன்று (28.11.2011)** சென்னை அண்ணாநகர் தொகுதிக்குட்பட்ட சூளைமேடு, அரும்பாக்கம், அமைந்தகரை, இந்திராநகர் ஆகிய பகுதிகளில் பெருமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினரும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சருமான திருமதி.எஸ்.கோகுல இந்திரா அவர்கள் பார்வையிட்டு, சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை மற்றும் சென்னை குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்களிடம் நிவாரணப் பணிகளை விரைவாக மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். மேலும், குடிநீரை லாரிகள் மூலமாக வழங்க ஏற்பாடு செய்தார்கள். விருகம்பாக்கம் கால்வாயை சீரமைத்து, கழிவுநீர் தங்கு தடையின்றி செல்ல நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்கள். தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை, பெருமழை காரணமாக மாநகராட்சி பள்ளிகளில் தங்க வைத்துள்ளவர்களை சந்தித்து உணவு வழங்கினார்கள். அவர்களுக்கு மருத்துவ வசதிகளை உடனடியாக வழங்க அலுவலர்களுக்கு ஆணையிட்டார்கள். உடன் சென்னை மாமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். பணிகளுக்கு தேவையான நிதியை தனது சட்டமன்ற தொகுதி நிதியிலிருந்து உடனடியாக ஒதுக்கீடு செய்வதாக தெரிவித்து பாதிக்கப்பட்டவர்களுடன் உரையாடினார்கள். அண்ணாநகர்–இந்திராநகர் கூவம் ஆற்றுக் கரையோரம் வசித்துவரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து, உணவுப் பொட்டலங்களை வழங்கி ஆறுதல் கூறினார்கள்.